# பிரப்பன் வலசை

## நன்னிலை விளக்கம்

*பண் --சாதாரி*

சுவாமிகள் இப்பதிகத்தை மன்மத வருடம் புரட்டாதி மாதம் 24 ஆம் தேதி புதவாரம் அன்று இயற்றியுள்ளார்கள் என்று வரலாறு கூறுகின்றது.

இந்நூலில் சித்தாந்த செல்வர், அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன், அவர்களின் வழிகாட்டுதல் பெயரில் இப் பாடல் என்னைப் போல் எளியவர் படிப்பதற்கு ஏற்றவாறு பிரித்தும் அந்த பாடல்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரித்து கொடுப்பது எளிய முறையில் கற்றுக் கொள்ளுவதற்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

*பூமகள் இயங்கு உலகில் நல்ல தமிழ் நாவலர் புலம்புகவிதைத்*
*தாமம் அணி நம் கடவுள் என்னும் முருகையர் அடிதன்னை எணியே*
*நாம்முனம் இருந்த வளமே கிளர் நயப்பு உளபிரப்பன்வலசை*
*ஆம்இதனை நண்ணுபவர் அன்புடையர் ஆவர் பழி அஞ்சு மனதே.* 1.

தீவினையைச் செய்ய அஞ்சுகின்ற என் மனமே! திருமகள் உலாவும் இம்மண்ணுலகில் நல்ல தமிழ்ப்புலவர் பாடுகின்ற கவிதைகள் என்னும் மாலைகளை மகிழ்ந்து அணிந்து கொள்ளும் நமது கடவுள் என்று கூறப்படும் முருகப் பெருமானின் திருவடியை நினைத்து நாம் முன்பு நிட்டை கூடியிருந்த வளம் விளங்கும் சிறப்புள்ள தலம் பிரப்பன் வலசை ஆகும். இதைச் சேர்ந்தவர்கள் முருகையனிடம் அன்புடையர் ஆவர்.

*தொண்டர் அகம் நின்றுநிமிர்கின்ற அருளின் பரிவு சொந்தம் உறவென்று*
*அண்டர் அலர் கொண்டு புசிதம்புரியும் ஆதி முருகையர் அருள் நாம்*
*கொண்டு சில வைகல் வதிதந்த இடம் என்று உயர்வு கூறும் அடர்பூ*
*வண்டு அறை பிரப்பன்வலசைப் பதி இதாகும் என் உள்மல்கு மனதே.* 2.

என் உள்ளே மிக நெருக்கமாக உள்ள மனமே! தொண்டர்களின் மனத்தில் நிலைபெற்று உயருகின்ற திருவருளின் அன்பு தமக்குச் சொந்தமாக வேண்டும் எனக்கருதித் தேவர்கள் மலர் கொண்டு பூசைசெய்யும் ஆதியான முருகையரின் திருவருளை நாம்பெற்றுச் சில நாட்கள் பதிநிட்டைகூடித்தங்கியிருந்த தலம் என்று உயர்வாகக் கூறப்படும் செறிந்த மலர்களில் வண்டுகள் ஒலிக்கும் பிரப்பன் வலசைத் தலம் இதுவே ஆகும்.

*மெய் அடிகள் நெஞ்சகம் இருந்து விளையாடி அருள் மெய்யர் எனுநம்*
*ஐஅடிகள் ஆம் முருகவேள் அடி நினைந்துதனி ஆகி அளிநீர்*
*பெய்இருகண்மூடி உள் இருந்து உணர்வு கொண்டஓர் பிரப்பன் வலசைச்*
*செய்யபதி ஈது அறிதி மெய் அறிவை நாடிடு திறத்த மனதே.* 3.

மெய்ஞ்ஞானத்தை அடைய விரும்பும் திறமுடைய மனமே! மெய்யான முனிவர்களின் மனத்துள்ளே இருந்து திருவிளையாடல் புரிந்து அருளும் மெய்ப்பொருள் ஆனவர் எனும் நமது அழகிய கடவுளாம் முருகவேளின் திருவடிகளைத் தியானித்துத் தனிமையில் இருந்து அன்புநீர் பொழியும் இரண்டு கண்களையும் மூடிக்குழிக்குள்ளே இருந்து ஞானத்தைப் பெற்ற ஒரு பிரப்பன்வலசை என்னும் நல்லதலம் இதுதான் என அறிவாயாக.

*சீதமதி யைச் சடையில் வைத்துமலர் வாளிஉடல் தீய விழிசெய்*
*ஆதிஇறை ஆய குருசாமி எனும் நம்பரனை அன்று கருதி*
*ஓதும் மொழி விட்டு அகம் ஒடுங்குநிலைகண்ட இடம் என்று குயிலும்*
*கோது அறு பிரப்பன்வலசைப்பதி இதாம் உறுதி கொண்ட மனதே.* 4.

நல்ல உறுதி கொண்டுள்ள மனமே! குளிர்ந்த பிறைநிலவைச் சடையில் சூடியவரும், மலர்களையே அம்பாகக் கொண்டுள்ள மன்மதனின் உடல்வெந்து சாம்பலாகும்படி நெற்றிக்கண்ணைச் சிறிது காட்டியவருமாகிய ஆதியான இறைவனான குருசாமி என்று கூறப்படும் நம்கடவுளை அன்று நினைத்துப் பேசும் பேச்சைவிட்டு மௌனம் கொண்டு மனம் அடங்கும் நிலையைக் கண்ட தலம் என்று கூறப்படும் குற்றமில்லாத பிரப்பன் வலசைத்தலம் இதுவே ஆகும்.

*தஞ்சம் என நிற்பவர்கள் அஞ்சன்மின் எனச் சொல் உரை தந்து அருள்புரி*
*நம் சிவபிரான் எனும் மயூர முருகையர் அடி நண்ணி உழலும்*
*நெஞ்சினை ஒடுக்கி இரவும்பகலும் நின்றவனம் உள்ள வளமே*
*விஞ்சிய பிரப்பன் வலசைப்பதி இதாம் மடமைவிட்ட மனதே.* 5.

அறியாமை விட்ட மனமே! அடைக்கலம் என உன்முன்னே நிற்பவர்களுக்குக் “அஞ்சாதீர்!” என்று சொல்லும் ஆறுதல் மொழியைத் தந்து அருள்புரியும் நம்முடைய சிவபிரான் எனப்படும் மயில்வாகன முருகையர் தம் திருவடிகளைச் சேர்ந்து, வருந்தும் மனத்தை அடக்கி இரவும் பகலும் பதிநிட்டை கொண்டு இருந்த சுடுகாடு உள்ள வளமிகுந்த பிரப்பன் வலசைத்தலம் இதுவே ஆகும்.

*அங்குலிகம் அம்பவளம் என்பன வணங்கு அதரமும் கருமைசால்*
*கங்குலினும் விஞ்சுகுழலும் திகழ் தெய்வானை ஒருகானவர் சுதை*
*தங்கள் ஒரு கொண்கன் எனும் நம் கடவுள் நல் நினைவு தந்த தகைமை*
*இங்கு என விளம்பிடு பிரப்பன்வலசைக் களரி ஈது என்மனதே.* 6.

என் மனமே! அழகிய சாதிலிங்கம், அழகிய பவளம் என்னும் இவை முருகப் பெருமானின் இரு தேவியர் தம் திருவாயின் இதழ் சிவப்பிற்கு இணையாக மாட்டோம் என்று கருதி வணங்கும் திருவாயிதழும் கருமைநிறம் மிகுந்த இரவினும் அதிகமான கருமை நிறம் வாய்ந்த கூந்தலும் விளங்கு தெய்வானையும் ஒரு வனவேடர்தம் மகள் எனும் வள்ளியம்மையும் தங்கள் கணவன் எனக் கூறும் நம்முடைய கடவுளான முருககையர் நல்ல நினைவை அருளிய பெருமை இங்குத்தான் எனச் சொல்லப்படும் பிரப்பன் வலசைச் சுடுகாடு இதுவேயாகும்.

*உள்ளபடி உன்னுபவர் உள்ளபடி உய்யஎன உன்னுபெரிய*
*வள்ளல் முருகையர்நடுநிற்கும் நிலையைச்சொலி மறைந்த இடமும்*
*வெள்ளைகிளர் புள்துயில் எழுப்புகடல் வெள் அலைகள் வீசுவளமும்*
*உள்ளஓர் பிரப்பன் வலசைப்பதி இதே உவகை உந்து மனதே.* 7.

மகிழ்ச்சி பொங்கும் மனமே! இறைவனை உண்மையாக நினைப்பவர் உண்மையாக உய்திபெறவென்று திருவுளத்தில் நினைக்கும் தற்பயன் கருதாத வள்ளலான முருகையர் இருதயதாமரையில் மனத்தை நிற்கச் செய்யும் நிலையைச் சொல்லி மறைந்த தலமும், வெண்மை நிறம் திகழ் பறவைகளை உறக்கத்தைவிட்டு எழுப்பும் கடலில் வெண்மையான அலைகள் வீசும் வளமும் உள்ள ஒரு பிரப்பன் வலசைத்தலம் இதுவே ஆகும்.

*மித்தைபடு வாழ்வினை விடுத்து நிஜ வாழ்வினில் விளங்க நமையே*
*சுத்தம் உறு கோவணம் உடன் திரியவிட்ட ஓர் சுரேசர் அடிசேர்*
*பத்தர் உயர் பூசனை புரிந்து அதிபண்பு உறு பிரப்பன் வலசை*
*இத்தலம் அதாம் அறிதி வைத்தநிலை நிற்கும் எனது ஏதுஇல் மனதே.* 8.

எந்த நிலையில் உன்னை வைக்கின்றேனோ அந்த நிலையில் செயல்படும் எனது குற்றமில்லா மனமே! பொய்யான இவ்வுலக வாழ்வை விடுத்து இறைவனைப் பற்றும் உண்மையான வாழ்வினில் விளங்க நம்மைத் தூய்மை உள்ள கோவணத்துடன் துறவியாய்த் திரிய விட்ட தேவர்களின் அரசனான முருகையர் திருவடிசேரும் பக்தர்கள் மேலான பூசைகள் செய்து அதிக நற்குணம் அடையும் பிரப்பன்வலசை என்பது இந்த தலம் ஆகும் என்று அறிவாயாக.

*துன்றும் அறுபொன்மவுலி எண் திசையும் மின்ன அதிசுந்தரம் மலி*
*பொன்தொடையல் கிம்புரி வயங்கும் எழில் மொய்ம்பு உடைய பூரணர் அருள்*
*ஒன்றை நனி உன்னிஉள் ஒடுங்க உணர்வு கண்டஓர் பிரப்பன்வலசை*
*சென்றவர் இருந்தவரும் அன்புடையராவர் அறி தெய்வமனதே.* 9.

தெய்வத்தன்மையுடைய என் மனமே! நெருங்கிய ஆறு பொன்முடிகள் எட்டுத் திசைகளிலும் ஒளிவீசவும் மிகந்த அழகு மிளிரும் பொன்மாலை, தோள் அணிகள் விளங்கவும் அழகிய திருமேனியுடைய பூரணர் ஆன முருகையர்தம் அருள் ஒன்றையே நன்று நினைத்து மனம் அடங்கும் உணர்வினைக் கண்ட ஒப்பற்ற பிரப்பன் வலசை என்னும் இத்தலத்தைத் தரிசிக்கச் சென்றவரும், இங்குத் தங்குவோரும் முருகையர் மீது பத்தி உடையவர் ஆவர் என்பதை அறிவாயாக.

*நாடுஅரிய தெய்வம் எனவே மறைசொல் ஆறுமுகன் நம் சிவன் எனாப்*
*பாடல் பல பாடிய ஓர் சோணகிரி கண்ட இருபத்ம அடியைக்*
*கூட என நாம் இனிது கொண்ட நடைகட்கு உதவி செய்த சுகுர்தர்*
*பீடு அணவி வாழ்இது பிரப்பன் வலசைப்பதி பிடித்த மனதே.* 10.

தலைவரான முருகையரைப் பற்றிக் கொண்ட என் மனமே! தேடி அடைதற்கு அரிய தெய்வம் என வேதங்கள் கூறும் ஆறுமுகன் நம்முடைய சிவன் எனப் பாடல்கள் பலவும் அவர் மீது பாடியருளிய அருணகிரி நாதப் பெருமான் தரிசித்த இரண்டு தாமரைத் திருவடிகளை நாம் அடைவதற்கு நன்கு மேற்கொண்ட பதிநிட்டை என்னும் செயலுக்கு உதவி செய்த நல்லோர் பெருமை பெற்று வாழும் இது பிரப்பன் வலசை என்னும் தலமாகும்.